### திடக்கழிவு மேலாண்மையில்

# ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

சென்னை, ஆக..3-

திடக்கழிவு மேலாண்மையில் ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்கிடும் வகையில் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்திற்கும் சென்னை - இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மையில் ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்கிடும் வகையில் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்திற்கும் சென்னை-இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு முன்னெடுப்புகளில் தற்போது தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் தூய்மை இயக்கம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தினை செயல்படுத்திட தூய்மை தமிழ்நாடு நிறுவனம் (Clean Tamil Nadu Company Limited) என்ற அமைப்பு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தூய்மை இயக்கத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் மாநிலத்திற்கான நிலையான கழிவு மேலாண்மை தீர்வுகளுக்கான நடிவடிக்கைகளை தூய்மை தமிழ்நாடு நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தூய்மை தமிழ்நாடு நிறுவனம் மாநிலம் முழுவதும் உருவாகும் திடக்கழிவுகளை அறிவியல் பூர்வமாக அதிநவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சரியான முறையில் கையாளவும், அவற்றை மறுசுழற்சி செய்யவும் ஒரு வலுவான ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்க சென்னை - இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் (Indian Institute of Technology, Madras) இணைந்து செயல்படவுள்ளது.

இதற்காக, தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் (CTCL) நிர்வாக இயக்குநர் மற்றும் சென்னை-இந்திய தொழில்நுட்ப நிறுவன இயக்குநருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும், மாநிலத்தில் திடக்கழிவு மேலாண்மையில் எதிர்கொள்ளப்பட்டு வரும் சவால்களை களைந்திட உயர் தொழில்நுட்பத்தின் மூலம் சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு உட்பட்டு மீள்பயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்திடும்.

இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் எஸ்.உமா, இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னையின் இயக்குநர் பேராசிரியர் முனைவர் காமகோடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### ரூ.18.12 கோடி மதிப்பீட்டில்

# சுற்றுலாத் துறை சார்பில் புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.3-

**சுற்றுலாத்துறையில் ரூ.18.12 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 புதிய திட்டப்பணிகள் மற்றும் சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் ரூ.6.84 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நிருவாகக் கட்டடம் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் மாநிலத்தின் சுற்றுலாத் தலங்களை உலகத்தரத்தில் மேம்படுத்தும் நோக்கில், குண்டாறு அணை, ஏலகிரி, பூண்டி நீர்த்தேக்கம், முத்துக்குடா கடற்கரை மற்றும் மதுரை ஓட்டல் தமிழ்நாடு வளாகம் ஆகியவற்றில் 18 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 5 புதிய திட்டப் பணிகளையும், அருங்காட்சியக துறை சார்பில், சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் 6 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நிருவாகக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

ஏராளமான உள்ளூர் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலாத் தலங்கள், பழம்பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத் துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**சுற்றுலாத் துறை சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

அந்த வகையில், தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் நோக்கில், தென்காசி மாவட்டம், குண்டாறு அணையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தளங்கள், வரவேற்பு மையம், உணவகக் கட்டடம் உள்ளிட்ட பல்வேறு பணிகள், திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரியில் 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நுழைவுப் பகுதி, உணவகக் கட்டடம் உள்ளிட்ட சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தில் 3 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலாத்தலமாக மாற்ற ஏதுவாக கட்டப்பட்ட உணவகக் கட்டடம்; புதுக்கோட்டை மாவட்டம், முத்துக்குடா கடற்கரையில் 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலாத்தலமாக மாற்றிக் கட்டப்பட்ட பார்வையாளர்கள் கூடம், நிருவாகக் கட்டடம், வாகன நிறுத்துமிடம், நடைபாதை, படகுத்துறை உள்ளிட்ட பல்வேறு பணிகள், மதுரை மாவட்டம், ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட விருந்து மண்டபக் கட்டடம், நவீன சமையலறைக் கட்டடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய உணவகக் கட்டடம்;

என மொத்தம் 18 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற சுற்றுலா மேம்பாட்டு பணிகளை முதலமைச்சர் அவர்கள் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

**சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய நிருவாகக் கட்டடத்தை திறந்து வைத்தல்**

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள பாரம்பரியக் கட்டடங்களுடன் ஒத்திசையும் வகையில் முகப்புத் தோற்றம் நன்கு அழகுற வடிவமைக்கப்பட்டு, இயக்குநர், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து காப்பாட்சியர்கள் மற்றும் அனைத்து அலுவலகப் பணியாளர்களுக்கான அறைகள், கூட்ட அரங்கு, பிறவசதிகளுடன் தரை மற்றும் முதல் தளத்துடன் ரூபாய் 6 கோடியே 84 இலட்சம் மதிப்பீட்டில் 10,532 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள புதிய நிருவாகக் கட்டடம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, சுற்றுலாத்துறை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பொது மேலாளர் திருமதி ச.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தில் பாதிக்கும்மேல் பணியிடங்கள் காலி!

## நாடாளுமன்றத்தில் கனிமொழி கருணாநிதி கேள்வி – ஒப்புக் கொண்ட ஒன்றிய அரசு!

புதுடெல்லி, ஆக.3-

**ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்கு தொடர்ந்து நிதிக் குறைக்கப்படு வது பற்றி தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. ஜீலை 31 அன்று கேள்விகளை எழுப்பினார்.**



“2025-26 நிதியாண்டில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு கிட்டத்தட்ட 10 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது ரூ.2,400.31 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. உடான் பிராந்திய விமான இணைப்புத் திட்டத்திற்கான நிதி ரூ.540 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் அரசாங்கம் அறிந்திருக்கிறதா? அப்படியானால் ஏன் நிதி குறைக்கப்பட்டது?

சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தில் (DGCA) தோராயமாக 48 சதவீதப் பணியிடங்களும், சிவில் விமானப் பாதுகாப்புப் பணியகத்தில் (BCAS) 37 சதவீதப் பணியிடங்களும் காலியாக உள்ளன என்பதையும் அரசாங்கம் அறிந்திருக்கிறதா?

முக்கிய பணியிடங்கள் காலியாக இருப்பது. விமான இயக்கங்களின் ஒழுங்குமுறை மேற்பார்வை, பாதுகாப்பு தணிக்கைகள் மற்றும் விமானப் போக்குவரத்து விதிமுறை களை அமல்படுத்துவது குறித்து கடுமையான கவலைகளை எழுப்புகிறது. இதற்கான காரணங் கள் என்ன?

சமீபத்திய அகமதாபாத் பெரும் விமான விபத்து உள்ளிட்ட விபத்துகள் மற்றும் நியர் மிஸ் சம்பவங்கள் *(விமான நிலையத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விமானங்கள் ஒன்றுக்கொன்று நெருக்கமாக வந்து ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு சூழ்நிலை)* நடந்திருக்கிற நிலையில் இது போன்ற முக்கியமான நிறுவனங்களில் தொடர்ந்து பட்ஜெட் குறைப்பு மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறைக் கான காரணங்கள் என்ன?

நிறுவனத் திறனை வலுப்படுத்தவும், முக்கியமான காலியிடங்களை நிரப்பவும், சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை சமரசம் செய்யப் படவில்லை என்பதை உறுதிப்படுத்தவும் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் என்ன?” ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி கேட்டிருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மோகோல் அளித்த பதிலில்,

“சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்கு 2024-25 நிதியாண்டு பட்ஜெட்டில் 2,658.68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் தோராயமாக 10% குறைக்கப்பட்டு 2025-26 நிதியாண்டில் 2400..31 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதற்கு முந்தைய நிதியாண்டின் பட்ஜெட் மதிப்பீடான ரூ. 2,357.14 கோடியை விட இது அதிகம்தான்.

பிராந்திய விமான இணைப்புத் திட்டம்- உடான் திட்டத்துக்கு 2024-25 நிதியாண்டில் 800 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இது 2025-26 நிதியாண்டில் 540 கோடியாக குறைக்க ப்பட்டுள்ளது. எனினும் அதற்கு முந்தைய நிதியாண்டின் பட்ஜெட் மதிப்பீடான ரூ. 502.00 கோடியை விட இது அதிகம்தான்.

சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தின் (DGCA) மொத்த 1644 பதவிகளில், 823 பதவிகள் (50.06%) காலியாக உள்ளன. அதாவது பாதிக்கு மேற்பட்ட பணியிடங்கள் காலியாகவே உள்ளன. சிவில் விமானப் பாதுகாப்பு பணியகத்தில் (BCAS) மொத்தமுள்ள 598 பதவிகளில், 230 பதவிகள் (38.46%) காலியாக உள்ளன.

அதேநேரம் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம், சிவில் விமானப் பாதுகாப்பு பணியகத்துக்கான பாதுகாப்பு முக்கியத்து வம் வாய்ந்த அம்சங்களுக்கு பட்ஜெட் ஒதுக்கீடு கடந்த 2024-25 நிதியாண்டிலிருந்து நடப்பு 2025-26 நிதியாண்டில் அதிகரிக்கப்பட்டு ள்ளது.

எனவே சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் பாதுகாப்பு தொடர்பான நிதி ஒதுக்கீடில் எந்த நிதிக் குறைப்பும் இல்லை.

2022 மற்றும் 2024 க்கு இடையில் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தில் 426 தொழில்நுட்ப பதவிகள் உட்பட 441 பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. காலியிடங்கள் ஏற்படுவதால் ஏற்படும் தேவை களைப் பூர்த்தி செய்ய தேவையான மனிதவளம் சரியான நேரத்தில் மற்றும் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதி செய்வதற்காக அனைத்து ஆட்சேர்ப்பு முறைகளும் தீவிரமாகப் பின்பற்றப்படுகின்றன, குறுகிய கால ஒப்பந்த பணியமர்த்தல் மூலமாக ஆட்சேர்ப்பு செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

சிவில் விமானப் பாதுகாப்பு பணியகம் என்பது ஒரு பிரதிநிதித்துவ அடிப்படையிலான அமைப்பாகும், இதில் பல்வேறு பாதுகாப்பு அமைப்புகளிலிருந்து பணியாளர்கள் டெபுடேஷன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறார்கள். பிரதிநிதித்துவ அடிப்படையில் பதவிகளை நிரப்புவது ஒரு மாறும் செயல்முறையாகும். மேலும் செயல்பாட்டுத் திறனை வலுப்படுத்துவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களை பிரதிநிதித்துவ அடிப்படையில் நிரப்புவதற்கான சுற்றறிக்கைகளை சிவில் விமானப் பாதுகாப்பு பணியகம் வெளியிடுகிறது” என்று தெரிவித்துள்ளார்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் 7-ம் ஆண்டு நினைவுநாள்!

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைதி ஊர்வலம் - அஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, ஆக. 3–

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



பதினான்கு வயதில் தமிழ் கொடியேந்தி, தமிழ் வாழ்க என முழக்கமிட்டு பொது வாழ்வை துவங்கிய கலைஞர் மாணவப் பருவம் முதலே இயக்கத்தை இணைத்து, பெரியாரின் பெருஞ்சீடனாய், பேரறிஞர் அண்ணாவின் அன்பு தம்பியாய், வளம் வந்த கலைஞர் என் உயிரினும் மேலான உடன்பிறப்பே என்று தன் உயிரோடும், உணர்வோடும் கலந்தவர், கலைஞர் அவர்கள் பன்முகத் திறன் கொண்டவர். அவரது எழுத்தாற்றல் எங்களை அடிமையாக்கியது, பேச்சாற்றல் எங்களை வீறுகொண்டு எழச்செய்தது, பட்டித்தொட்டி எங்கும் கழக கொள்கைகளை பறைச்சாற்றி, கழகத்தை காத்து நின்ற காவிய தலைவன் அரசியலில் அவரை ஏய்த்தோரும், போற்றினோரும், அரசியல் வாழ்வு பெற்றது இதை காலம் மறந்திடாது.

கலைஞர் சங்கத் தமிழ் கண்டார், குரல் ஓவியம் கண்டார், பொன்னர் சங்கர் என்னும் பல அறிய புத்தகங்களை தந்தாலும், தொல்காப்பிய பூங்கா இந்த காலம் உள்ளவரை அவரது பெயரை காத்து நிற்கும், வள்ளுவர் கோட்டமும், பூம்புகாரும், குமரி முனையிலே வானுயர்ந்து நிற்கும் வள்ளுவர் சிலையும், நீங்கா புகழ் சேர்த்த கழகத்தின் பொன்விழா கண்ட தலைவர், அரசு கட்டிலிலே கண் ஒலி திட்டம், கை ரிக்ஷா ஒழிப்பு, குடிசை மாற்று வாரியம், பேருந்து பொதுஉடமையாக்கியது, மே தின விடுமுறை நாள், பெண்ணுக்கு சொத்துரிமை, உள்ளாட்சியிலே 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு, பெரியார் நினைவு சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சி திட்டம், கலைஞர் காப்பீட்டு திட்டம், உழவர் சந்தை திட்டம், முதியோர் ஓய்வு தொகை, விலங்குகளுக்கும் வருமுன் காப்பு திட்டம், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இடஒதுக்கீட்டை அமுல் செய்தது, முஸ்லீம்களுக்கு, அருந்ததியர்களுக்கு, உள் இடஒதுக்கீடு வழங்கியது, காலத்தால் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது,

இந்தியாவிலே 13 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற ஒரே தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார்.

தந்தை பெரியாரின் எண்ணங்களை, பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை, பெரியாரின் துணிவோடும், அண்ணாவின் கனிவோடும், செயலாற்றிய சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் 2018 ஆகஸ்ட் 7 ம் தேதி இயற்கை உங்களை எங்களை விட்டு பிரிய செய்தாலும், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று பேரறிஞர் அண்ணாவின் கூற்றின் படி அரசியல் எதிரிகளும், உங்களை புகழ்ந்தபோது மகிழ்ச்சியிலே திளைத்தவர்கள் நாங்கள், தமிழ்நாட்டின் தலைவர் மட்டுமல்ல, இந்தியாவின் வழிகாட்டி, பல பிரதமர்களையும், குடியரசு தலைவர்களையும்,உருவாக்கி சாதனை படைத்த சரித்திர தமிழ் அறிஞர் கலைஞர்.

தகைமைசால் தலைவராக – எழுத்தாளராக – கவிஞராக – சொற்பொழிவாளராக – திரைக்கதை வசன கர்த்தாவாக – இலக்கியவாதியாக – திரைப்படத் தயாரிப்பாளராக – தலைசிறந்த நிர்வாகியாக – தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக – உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராகத் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 வது நினைவு நாளினையொட்டி 07.08.2025 வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு இராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊர் கிளை, வட்ட கிளை தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து அமைதி ஊர்வலமாகச் சென்று அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, அயலக அணி, அமைப்புச்சார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

### தமிழ்நாடு ஊரக அமைப்புகளில்

# கிராமப்புற விழிப்புணர்வை உருவாக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி!

*புதுடெல்லி,ஆக.3-*

*தமிழ்நாட்டில் தூய்மை இந்தியா திட்டம் கிராமீன் (எஸ்.பி.எம் ஜி) தொடங்கப்பட்டதிலிருந்து செயல்படுத்தப்பட்ட நிலை என்ன?*



*தமிழ்நாட்டில் குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை நிர்ணயிக்கப்பட்ட மற்றும் அடையப்பட்ட இலக்குகள்,கட்டப்பட்ட (ஐ.எச்.எச்.எல்) தனிநபர் வீட்டு கழிப்பறைகளின் எண்ணிக்கை, தமிழ்நாடு ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை (எஸ். எல். டபிள்யூ.எம்) திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் இவை நிறைவடைந்த கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை,*

*தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமப்புறங்களும் (ஓ.டி. எஃப்) திறந்த வெளி கழிப்பிடம் இல்லாதவை என்று அறிவிக்கப் பட்டுள்ளதா? அவ்வாறு இல்லையென்றால், அதன் விவரங்கள் மற்றும், நிலுவையில் உள்ள பகுதிகளுக்கு அத்திட்டங்கள் செயல்படுத்தாத காரணங்கள் என்ன ?*

*நாடு முழுமையான திறந்தவெளி கழிப்பிடம் (ஓ.டி. எஃப்) நிலையை அடைவதற்கு ஒன்றிய அரசு நிர்ண யித்துள்ள காலக்கெடு என்ன? தமிழ்நாடு ஊரக அமைப்புகளிடையே சமூக ஈடுபாட்டை வலுப்படுத்தவும், கிராமப்புற விழிப்புணர்வை உருவாக்கவும், தமிழ்நாடு ஊரக அமைப்புகளில் திறம்பட செயல்படுத்தவும் இதுவரை ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று*

*மாநில ஜல் சக்தி அமைச்சர் வி. சோமண்ணாவிடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.*

---

# நாவலர் நெடுஞ்செழியன் புதல்வர் மதிவாணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.3-

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் புதல்வர் மதிவாணன் (வயது 65) உடல்நலக் குறைவினால் மறைவெய்தினார். அவரது மறைவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற மதிவாணன் அவர்கள் கடந்த சில நாட்களாக உடல் நலமில்லாமல் இருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் மறைவெய்தினார்.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் புதல்வர் மதிவாணன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். மறைந்த அன்னாரது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று மரக்காணத்தில் நடைபெற்றது.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## என்.வி. நடராசன்
## ஆகஸ்ட் 3 (1975)



**சென்னை மாவட்டக் கழகத்தின் முதலாம் செயலாளர். கழகச் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழுவின் முதல் செயலாளர், கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளர் மற்றும் தி.மு.கழகத்தில் மிக நீண்டகாலம் தலைமை நிலையச் செயலாளராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.**

**அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமை என்ற புகழ் பெற்ற ‘பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை’ அமைந்தபோது, அதன் அமைச்சராக முதலில் பதவி வகித்தவரும் இவர்தான்.**

**‘திராவிடன்’ என்ற இதழை துவக்கி கழகத்தின் போர்முரசமாய் அதை நடத்தி வந்தார்.**

**இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் “நமது தி.மு.கழக மாலடோவ் என்.வி.என்” என பெருமைப்படக்கூறியது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**